முருகப்பெருமான் துணை

**மகான் ஆண்டாள் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**27.11.2023**, திங்கட்கிழமை

1. சத்திய ஜோதி தனை ஏற்றி
சரவணச் சுடராக்கி மக்களுக்கு
இத்தரையில் நன்மை புரிகின்ற
இணையிலா ஞான குருவே
2. குருவே ஆறுமுக அரங்க ஞானியே
குறைவிலா உன் பெருமை கூறி
பெருமைபட ஆண்டாள் யானும்
புகலுவேன் சோபகிருது தேள் திங்கள்
3. திங்களிலே லாபதிகதி சோமவாரம்
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 11 ம் நாள், 27.11.2023, திங்கட்கிழமை)
தேசிகன் கேட்க அறிவுரை ஆசி
ஓங்கார உலகம் அமைய உரைப்பேன்
ஓங்கார குடில் எனும் ஞான சபை
4. ஞானசபை அமைத்து அருளும்
ஞானிகள் வாழ் சபைதனை
வானவர்கள் மகா சக்திகள்
வழிமொழிந்து வரம்பல தந்து
5. தந்துமே உலக மக்களெல்லாம்
தவபலம் தரும பலமும் அடைந்து
சிந்தை தெளிவு சித்திகளடைய
சூட்சுமமாக ஆற்றல் தந்துவர
6. வருகவே கலியுக மக்களும்
வாழும் காலம் தெளிவு பெற
மறுபிறவி எனும் தொடர்பிறவி
மண்ணுலகில் தொடரா பிறப்பறுக்க

7. அறுக்கவே ஆத்ம ஞானத்தெளிவு
அழியாமையுடன் அடைந்து உயர
மறுக்கா அரங்கன் உபதேசம்
மனமுவந்து ஏற்றுத் தொடர

8. தொடரவே குருவருள் வடிவாக
திருவருள் பலம் தானும் கூடி
இடர்களான மாயை வென்று
இந்தப் பிறவிப் பயன் நோக்கம்

9. நோக்கம் தேடும் நுண்ணறிவு
நீதி நெறி அறம் குன்றா வாழ்வு
ஆக்கமுடன் குருவடி திருவடியென
அகலா ஞானத்திருவடி கிட்டி

10. கிட்டியே சாமானியனாக வந்து
குருவருள் பலத்தால் விளங்கி
தீட்சை பலம் தெய்வ தவபலமான
தேசிகனார் தேர்வு செய்தநல்

11. செய்தநல் ஞானவான்களாக
சேவை கூட்டி உலகை மாற்றும்
மெய்ஞானவான்களாய் சக்திகளாய்
மேலோங்கி கலியுக ஞானிகள் ஆவர்
அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–